**IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, KARUR.**

**MCOP.NO.180/ 2024**

Deposition of PW - 1 solemnly affirmed by S.Vidya Priya, Bench Clerk Grade-II of this court on 02.07.2026 in accordant with provisions of XLIV of 1989.

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : **அசோக்குமார்** | Age | : | |
| Father's Name | : **பழனிவேல்** | Village | : | |
| Calling | : | Taluk | : | |

**முதல் விசாரணை**

நான் இம் மனுவின் மனுதாரர் ஆவேன். எனது சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக ஏற்கனவே தாக்கல் செய்துள்ளேன். எனது தரப்பு சான்றாவணங்களை தாக்கல் செய்கிறேன்.

| **வ.எண்.** | **தேதி** | **ஆவணம்** | **ஆவணத்தின் தன்மை** |
|---|---|---|---|
| ம.சா.ஆ.1 | | முதல் தகவல் அறிக்கை | பதிவிறக்க நகல் |
| ம.சா.ஆ.2 | | இறுதி அறிக்கை | பதிவிறக்க நகல் |
| ம.சா.ஆ.3 | | மோட்டார் வாகன ஆய்வறிக்கை | பதிவிறக்க நகல் |
| ம.சா.ஆ.4 | | காயச்சான்று | பதிவிறக்க நகல் |
| ம.சா.ஆ.5 | | மருத்துவ விடுவிப்பு அறிக்கை | அசல் |
| ம.சா.ஆ.6 | | மருத்துவ ரசீதுகள் (ரூ.1,74,217/-) | (எதிர் தரப்பு ஆட்சேபனையுடன்) அசல் |
| ம.சா.ஆ.7 | | ஆதார் அட்டை | அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்ட நகல் |

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் திண்டுக்கல் மாவட்டம், பாளையம் அருகில் உள்ள சுக்காம்பட்டி என்ற ஊரில் வசிக்கின்றேன். இன்று நான் நீதிமன்றத்திற்கு இரு சக்கர வாகனத்தில் வந்தேன். எனக்கு இரு சக்கர வாகன ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரிதான். விபத்து சமயத்தில் நான் இரு சக்கர வாகனம் தான் ஓட்டினேன். விபத்து சமயத்தில் நான் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி சென்று கொண்டிருந்தேன். விபத்து நடைபெற்ற நேரம் காலை நேரம் ஆகும். விபத்து நடைபெற்ற சாலை ஒரு பேருந்து செல்லக்கூடிய

அகலம் உள்ள சாலையாகும். விபத்து நடைபெற்ற இடத்திற்கு அருகில் சாலையில் வளைவு உள்ளது என்றால் சரிதான். மேல்புறமாக வளைந்து செல்லும் சாலையாகும்.

வளைவான பகுதியானது விபத்து நடைபெற்ற பகுதியிலிருந்து சுமார் 20 மீட்டர் தொலைவில் உள்ளது. சாலையில் வளைவான பகுதிக்கு முன்பு கிழக்கு பக்கம் ஒரு பம்பிங் ஸ்டேசன் உள்ளது என்றால் சரிதான். மேற்கு பக்கத்தில் மருதம் பெயிண்டிங் கடை உள்ளது என்றால் அந்த இடம் காலியாகத்தான் இருந்தது. விபத்து நடைபெற்ற இடத்தை காவல்துறைக்கு நான்தான் அடையாளம் காண்பித்தேன். என்னிடம் காட்டப்படும் மாதிரி வரைபடத்தில் உள்ளது போல் சம்பவ இடம் உள்ளதா என்றால் அவ்வாறு இல்லை.

நான் எனது வழக்கை நிலை நிறுத்தும் பொருட்டு வரைபடத்தில் உள்ளது போல் சம்பவ இடம் இல்லை என்று தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பஜாஜ் பல்சர் வாகனம் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்தது. எனது வாகனத்திற்கு முன் வலது பக்கம் சேதம் ஏற்பட்டது. எதிரில் வந்து மோதிய வாகத்திற்கு எந்த பகுதியில் சேதம் ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது. அந்த வாகனத்தில் வந்த நபருக்கு காயம் ஏற்படவில்லை. நான் தான் இரு சக்கர வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் வளைவு உள்ள பகுதியில் ஏறி தவறான பகுதியில் சென்று விபத்தை ஏற்படுத்திக் கொண்டேன் என்றால் சரியல்ல. நான் இடது பக்கமாகத்தான் சென்றேன். எதிரில் வந்த வாகனம்தான் வலது பக்கமாக வந்து என் மீது மோதியது.

எதிரில் வந்த வாகனத்தை நான் சுமார் 10 மீட்டர் தொலைவில் பார்த்தேன். இந்த விபத்திற்கு நான்தான் காரணம் என்றால் சரியல்ல. எனக்கு காயங்கள் ஏற்பட்டதால் அதற்கு இழப்பீடு பெறவேண்டும் என்று எதிரில் வந்த வாகனம் அஜாக்கிரதையாக ஓட்டியதாக தவறாக சொல்கிறேன் என்றும், பொய்யான புகார் கொடுத்துள்ளேன் என்றும் சொன்னால்சரியல்ல. நான் 5 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேன். காயங்கள் முழுவதும் சரியான பின்புதான் சிகிச்சையிலிருந்து நான் விடுவிக்கப்பட்டேன் என்றால் அவ்வாறு இல்லை. நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.6 ஆவணத்தின்படி 15.10.2022 க்கு பின்பு எந்த சிகிச்சையும் பெற்றதாக ஆவணங்கள் இல்லை என்றால் நான் வெளி நோயாளியாக அவ்வப்போது சிகிச்சை பெற்று வருகிறேன்.

நான் வெளி நேயாளியாக சிகிச்சை பெறவில்லை என்றும், அவ்வாறு சிகிச்சை பெற்றிருந்தால் அதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல.

எனக்கு எந்தவித உடல் ஊனமும், வருமான இழப்பும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. நான் கொத்தனார் வேலை செய்து மாதம் ரூ.30 ஆயிரம் சம்பாதிப்பதாக வழக்கிற்காக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.6 ஆவணம் வழக்கிற்காக மிகைப்படுத்தி தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நிரூபண வாக்குமூலம் பத்தி 5ல் நான் சொல்லியுள்ள உடல் ஊன சங்கதிகள் அனைத்தும் அதிகப்படியான இழப்பீடு பெறவேண்டி சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் தான் இந்த விபத்திற்கு காரணம் என்பதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. இந்த வழக்கு காலாவதி தோஷத்தால் உள்ளது என்பதால் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

| | |
|---|---|
| | சாட்சி கூறிய சாட்சியத்தை எதிரியின் முன்னிலையில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சுசெய்யப்பட்டு, பின்னர் சாட்சியிடம் படித்துக் காட்டி சரியாக உள்ளது என்று ஒப்புக் கொண்டு சாட்சியால் கையெழுத்திடப்பட்டது.<br>(ஓம்.என்.எஸ்.ஜெயபிரகாஷ்)<br>தலைமை குற்றவியல் நடுவர்,<br>கரூர். |